

முதலமைச்சரும் ,கழக தலைவருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டு மக்களை ஒன்றிணைக்கும் வகையில் ஓரணியில் தமிழ்நாடு என்ற தலைப்பில் செயலியை துவக்கி வைத்தார். அந்த செயலியை எவ்வாறு மக்களிடம் சென்று சேர்ப்பது என்பது பற்றி வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி செய்தியாளர்களிடம் தெரிவித்தார். நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு கிழக்கு வி.சி.சந்திரகுமார் , ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், ஈரோடு மத்திய மாவட்ட செயலாளர் என்.டி தோப்பு வெங்கடாசலம், உள்ளிட்ட மாநில, மாவட்ட ,ஒன்றிய மாநகர, பகுதி கழக பேரூர் கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் அவர்களின் 'ஓரணியில் தமிழ்நாடு' முன்னெடுப்பு பயணமாக கோவை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட சூலூரில் புதிய உறுப்பினர் சேர்க்கையை தொடங்கி வைத்து இந்தப் பயணம் நிச்சயமாக வெற்றிப் பயணமாக அமையும் என்று மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தெரிவித்தார்!

### மூத்த தமிழறிஞர் – உலகம் முழுவதும் தமிழ்ப் பணி மேற்கொண்ட

# பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் மறைவு!

சென்னை,ஜூலை.6-

**மூத்த தமிழறிஞர் உலகம் முழுவதும் தமிழ்ப் பணி மேற்கொண்டவர், தமிழ் மொழிக்காகவே தன் வாழ்நாளை அர்ப்பணித்த தமிழ் பற்றாளர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பேரன்பை பெற்ற பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்கள் (வயது 91) வயது மூப்பு காரணமாக நேற்று முன்தினம் (4.7.2025 வெள்ளிக்கிழமை) இரவு 7 மணியளவில் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க பெரிதும் வருந்துகிறோம்.**

பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்கள் தன் வாழ்நாள் முழுவதையும் தமிழ்மொழியை உலகெங்கும் கொண்டு சென்று பரப்புவதில், தீவிரம் காட்டி செயல்பட்டு வந்தவர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மீது பேரன்பு கொண்டவர்.

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீதும் பேரன்பு கொண்டவராகத் திகழ்ந்தவர். வா.மு. சேதுராமன் அவர்கள் மீதும், முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் மிகுந்த அன்பு கொண்டிருந்தனர்.

**உலக மகாகவி விருது**

வா.மு. சேதுராமன் அவர்கள் உலக மகாகவி விருது பெற்றவர். 100 நூல்களை எழுதியவர். 54 ஆண்டுகாலமாக தமிழ்ப்பணி என்ற பத்திரிகையை நிறுவி நடத்தி வந்தவர். தமிழ் மொழிக்காக - தமிழ்மொழியை உலகம் முழுவதும் பரப்பிட உலகம் முழுவதும் பயணித்தவர்.

## தமிழறிஞர்கள் – கழகத்தினர் அஞ்சலி!



1980 ஆண்டு முதல் 30 உலக கவிஞர்கள் மாநாட்டில் பங்கேற்றவர் ஆவார். பன்னாட்டு தமிழுறவு மன்றம் நிறுவி உலகம் முழுவதும் 7 மாநாடுகளை நடத்தியவர்.

ஜெர்மன், தாய்லாந்து, மலேசியா, அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் தமிழ் மாநாடுகளை நடத்திய பெருமை கொண்டவர்.

**கலைஞர் காவியம் நூல்**

அண்மையில் "கலைஞர் காவியம்" நூலை எழுதி கலைஞர் புகழை உலகெங்கும் பரவச் செய்தார்.

எங்கும் தமிழ்
எதிலும் தமிழ்

"எங்கும் தமிழ் - எதிலும் தமிழ்" என்பதை வலியுறுத்தி 32 ஆண்டு காலமாக தொடர்ந்து நடைபயணம் மேற்கொண்டவர். குமரி முதல் சென்னை வரை 1993-ஆம் ஆண்டு நடைபயணம் மேற்கொண்டார்.

**திருக்குறளை தேசிய நூலாக்க வலியுறுத்தினார்!**

திருக்குறளை தேசிய நூலாக்க வலியுறுத்தி, குமரி முதல் இமயம் வரை ஊர்தி பயணமாகச் சென்று பிரதமர் அலுவலகத்தில் கோரிக்கை மனு அளித்தார். ஒரு இலட்சம் கவிதைகளை ஆக்கியப் பெருமைக்குரியவர்.

**சேது காப்பியம்!**

"சேது காப்பியம்" 12 காண்டங்களாக எழுதி உலக மகா கவிஞர் என்ற பெருமைக்குரியவர் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்கள்.

**விருதுகள்**

பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்கள் கலைமாமணி விருது, முரசொலி அறக்கட்டளை விருது, திருவள்ளுவர் விருது, இயற்செம்மல் விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளைப் பெற்ற பெருமைக்குரியவர் ஆவார்.

தன் மூச்சு முழுவதும் தமிழ்ப் பணியே என்று வாழ்ந்த பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்கள் வயது மூப்பின் காரணமாக நேற்று முன்தினம் (4.7.2025 - வெள்ளிக்கிழமை) இரவு 7 மணியளவில் மறைவுற்றார். செய்தியறிந்ததும் கழகத்தினர், தமிழ் அறிஞர்களும் நேரில் சென்று மறைந்த வா.மு.சேதுராமன் அவர்களின் உடல்மீது மலர் வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

**முரசொலியில் நேற்று முன்தினம் வெளியான கவிதை!**

நேற்று முன்தினம் (4.7.2025) முரசொலியில் 'மண்-மொழி-மானம்-காக்கும் முதல்வர், மாட்சி ஆட்சி மீண்டும் மீண்டும் மலர்கவே' என்று கவிதையில் குறிப்பிட்டிருந்தார்.

மறைந்த பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்களின் உடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக, "தமிழ் பணி, 31/12, சாய்நகர் இணை, காளிகாம்பாள் கோவில் தெரு, சென்னை 92" என்ற முகவரியில் வைக்கப்பட்டுள்ளது.

மறைந்த பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்களுக்கு வா.மு.சே. திருவள்ளுவர், வா.மு.சே. கவியரசன், வா.மு.சே. ஆண்டவர், வா.மு.சே. மணிகண்டன் என்ற மகன்களும், பூங்கொடி என்கிற ஒரு மகளும் உள்ளனர்.

### தமிழ்ப் பணிக்கெனத் தன்னை ஒப்படைத்துக் கொண்ட

# தியாகச் சுடர் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் புகழ் தமிழுள்ளவரை போற்றப்படும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை,ஜூலை.5-

பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்கள் நேற்று முன்தினம் இரவு இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நிறுவனர் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து சொல்லொணாப் பெருந்துயர் என்னை ஆட்கொண்டது!

இன்றுகூட முரசொலியில், "ஓரணியில் தமிழ்நாட்டின் உரிமை நாட்டுவோம். தமிழர் ஒற்றுமையாய்த் திரண்டெழுந்தே வலிமை காட்டுவோம்!" எனக் கவிதை தீட்டியிருந்த அவர் இப்போது நம்மிடையே இல்லை என்பதைச் சிந்தை ஏற்க மறுக்கிறது.

"தமிழ் தமிழ் தமிழ் என்று தன்னுடைய வாழ்நாள் முழுவதும் தமிழுக்காகவே தன்னை ஒப்படைத்திருக்கின்ற ஒரு பெருமகனைக் காண வேண்டுமென்றால், அது பெருங்கவிக்கோ சேதுராமனைத் தவிர வேறு யாரும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை." என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்ட பெருந்தகை அவர்!

தமிழ்நாடு அரசின் கலைமாமணி, திருவள்ளுவர் விருது உள்ளிட்ட பல விருதுகளுக்குச் சிறப்பு சேர்த்த செந்தமிழ்ச் செம்மல்.

தமிழ்ப்பணிக்கெனத் தன்னை ஒப்படைத்துக்கொண்ட அந்தத் தியாகச் சுடர் தனது ஒளியை நிறுத்திக் கொண்டு, வேதனை எனும் இருளில் நம் மனதைத் தவிக்கவிட்டிருக்கிறார்!

ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட கவிதைகள், நூறுக்கும் மேற்பட்ட கவிதை நூல்கள் உள்ளிட்ட படைப்புகளைத் தமிழுலகிற்கு அளித்த பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்களது புகழ் தமிழுள்ள வரை போற்றப்படும்!

அன்னாரது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினர் - உறவினர்கள் - தமிழ் கூறு நல்லுலகின் சான்றோர்கள் - தமிழ்த் தொண்டர்கள் என அனவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# கரூர் மாவட்டத்தில் 'ஓரணியில் தமிழ்நாடு' புதிய உறுப்பினர் சேர்ப்பு!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி துவக்கி வைத்தார்!

கரூர், ஜூலை.6-

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின், ஓரணியில் தமிழ்நாடு, முன்னெடுப்பு திட்டத்தில் உறுப்பினர் சேர்க்கையை வீடு வீடாகச் சென்று கரூர் மாவட்ட செயலாளர் வி.செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார்.

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கரூர் சட்டமன்றத் தொகுதி கோடங்கிபட்டி, மற்றும் சொந்த ஊர் ராமேஸ்வரபட்டி உள்ளிட்ட பகுதிகளில் ஓரணியில் தமிழ்நாடு, முன்னெடுப்பு திட்டத்தில் மாபெரும் உறுப்பினர் சேர்க்கையை கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார்.

செய்தியாளர்களிடம் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி கூறியதாவது

தமிழ்நாடு முழுவதும் இது உறுப்பினர் சேர்க்கை என்று இல்லாமல் "ஓரணியில் தமிழ்நாடு" அனைத்து குடும்பங்களும் தமிழ்நாட்டில் ஓரணியில் நிற்கிறது. பாஜக வின் தாக்குதல்களை நெஞ்சுரத்தோடு எதிர்கொண்டு நம் உரிமைகளை, நமது மண், மொழி, மானத்தை காக்கக்கூடிய வகையில் ஒன்றிணைந்து செயல்படுவதற்கான ஒரு மகத்தான பணியாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் "ஓரணியில் தமிழ்நாடு"என்றமுன்னெடுப்பை தொடங்கி வைத்திருக்கிறார்கள். ஒன்றிய பாஜக அரசு தமிழ்நாட்டு மக்களுக்கு துரோகங்களை செய்வதுடன் திட்டங்களையும், நிதிகளையும் தருவதில்லை. ஒன்றியத்தின் சுய ரூபத்தை மக்களிடம் வெளிப்படுத்தும் வகையிலும், பல்வேறு நிதி நெருக்கடிகள் இருந்தபோதிலும் ஒன்றிய அரசு நிதி தராவிட்டாலும் கூட முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய அயராது உழைப்பால் இந்தியாவில் தமிழ்நாட்டை முதல் இடத்திற்கு கொண்டு சென்று ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க பெருமையை உருவாக்கித் தந்திருக்கின்றார்கள்.

3ம் தேதி காலை 8.00 மணிக்கு கரூர் மாவட்டத்தில் நான்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 1055 வாக்குச்சாவடிகளிலும், பூத் வாரியாக எங்கள் இயக்கத்தை சார்ந்த (பிஎல்ஏ 2) தகவல் தொழில்நுட்ப பூத் டிஜிட்டல் ஏஜென்ட், இளைஞர் அணி, மகளிர் அணி நிர்வாகிகள் சேர்ந்து வீடு, வீடாகச் சென்று மண், மானம், மொழி காப்பதற்காக இந்த பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

கழக அரசு செயல்படுத்துகின்ற அனைத்து சாதனை திட்டங்களை எடுத்துக் கூறியும், கரூர் மாவட்டத்தில் கழக அரசு செயல்படுத்தி வருகின்ற ரூ. 3 ஆயிரம் கோடி மதிப்பிலான திட்டங்களை விளக்கியும், சாதனைகளை எடுக்கக்கூறியும், திமுகவில் உறுப்பினராக சேருங்கள் என்று என வேண்டுகோள் விடுக்கப்பட்டு உறுப்பினர்கள் கழகத்தில் இணைந்து வருகின்றனர். தொடர்ந்து கரூர் மாவட்டம் முழுவதும் உள்ள 1,055 பூத்துகளிலும் திமுக சார்பில் இந்த உறுப்பினர் சேர்க்கை இன்று தொடங்கி 40 நாட்களுக்கு நடைபெறுகிறது.

கரூர் மாவட்டத்திலுள்ள 3 லட்சத்து 32 ஆயிரம் குடும்பங்களில் 8 லட்சத்து 97 ஆயிரம் வாக்காளர்கள் உள்ளனர். இவர்களில் மூன்று லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்களை திமுகவிற்கு உறுப்பினராக சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது என செய்தியாளர்களிடம் வி.செந்தில் பாலாஜி கூறினார்.

### 10.07.2025 அன்று தமிழ்நாடு துணை முதலமைச்சர் வருகை குறித்து

# நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி., அறிவிப்பு!

நாமக்கல், ஜூலை. 6-

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழுக் கூட்டம் இன்று (06.07.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 11.00 மணிக்கு நாமக்கல் மோகனூர் சாலை, முல்லை நகரில் உள்ள நாமக்கல் கிழக்கு மாவட்ட அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் இனமான பேராசிரியர் அரங்கத்தில் நடைபெற உள்ளது.



மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன் அவர்கள் தலைமையில், தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர்மா.மதிவேந்தன், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட கழக துணை செயலாளருமான கே.பொன்னுசாமி, நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராம லிங்கம் ஆகியோர் முன்னிலையில், நடைபெறும் இக்கூட்டத்திற்கு தொகுதிப் பார்வையாளர்கள், இராசிபுரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் நன்னியூர் ராஜேந்திரன், மாநில நெசவாளர் அணி தலைவர், சேந்தமங்கலம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ரேகா பிரியதர்ஷினி, மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர், நாமக்கல் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் முனவர் ஜான், மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகி கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர், சிறப்பு அழைப்பாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 10.07.2025 அன்று நாமக்கல் மாவட்டத்திற்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வருகை குறித்து,

'ஓரணியில் தமிழ்நாடு' - உறுப்பினர் சேர்க்கை பணிகள் குறித்து, கழக ஆக்க பணிகள் குறித்து.

இவ்வாறு நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், எம்.பி., தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



நீலகிரி மாவட்டம் கூடலூர் நகரத்திற்குட்பட்ட வார்டு எண் 10 துப்பு குட்டி பேட்டை 159,160 பூத்துகளில் தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்கவும், கழக ஆட்சி தொடரவும், ஓரணியில் தமிழ்நாடு என்ற புதிய கழக உறுப்பினர்கள் சேர்க்கும் பணியினை தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், நீலகிரி மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு, மாவட்ட அவைதலைவர் போஜன், கூடலூர் சட்டமன்ற பொறுப்பாளர் RP.பரமேஷ் குமார், செயற்குழு உறுப்பினர்கள் மூ.திராவிட மணி, காசிலிங்கம், கூடலூர் நகரக் கழக செயலாளர் ச.இளஞ்செழியன், ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தார்.உடன் கூடலூர் சட்டமன்ற தொகுதி தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர் செந்தில்,வார்டு செயலாளர் BLA2,BDA, மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோர் பங்கேற்றனர்.



தஞ்சை வடக்கு மாவட்டம், தேப்பெருமாநல்லூர் ஊராட்சியில் 'ஓரணியில் தமிழ்நாடு' இயக்கத்தின் கீழ் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் வீடுவீடாக;r சென்று மக்களை சந்தித்து உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபட்டார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் எம்.பி ராமலிங்கம், முன்னாள் ஒன்றிய குழு தலைவர் சுபா.திருநாவுக்கரசு, வடக்கு ஒன்றிய அவைத்தலைவர் சிங்கை சிவா, வடக்கு ஒன்றிய வர்த்தக அணி துணை அமைப்பாளர் ஜக்கு பாலா, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் குமரவேல், முன்னாள் துணைத் தலைவர் புகழேந்தி, வார்டு செயலாளர் வீர.சுந்தரம் மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.